

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 40. குலாப்பத்து

(தில்லையில் அருளியது)

அனுபவம் இடையீடுபடாமை

(கொச்சகக் கலிப்பா)



# திருச்சிற்றம்பலம்



ஓடுங் கவந்தியுமே உறவுஎன்றிட்டு உள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்துஅடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

1





துடிஏர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடிஏறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்
முடி டியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





என்புஉள் உருக்கி இருவினையை ஈடுஅழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்பு உள்ளவற்றை முழுதுஅழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





குறியும் நெறியும் குணமும்இலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவுஅரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்த அமுதாம் சிவபதத்தை
அறியும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

4





பேரும் குணமும் பிணிப்புஉறும் இப்பிறவிதனைத்
தூரும் பரிசுதுரிசு அறுத்துத் தொண்டர்எல்லாம்
சேரும் வகையால் சிவன்கருணைத் தேன்பருகி
ஆரும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்து உடலம்மாண்டு இங்ஙன் போகாமே
நம்பும்என் சிந்தை நணுகும்வண்ணம் நான்அணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





மதிக்குந் திறல்உடைய வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்கும் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றும்இலோம் எனக் களித்திங்கு
அதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

7





இடக்கும் கருமுருட்டு எனப்பின் கானகத்தே
நடக்கும் திருவடி என்தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் வல்ஆட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





பாழ்ச்செய் விளாவிப் பயன்இலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாள்செய்ய தாமரைச் சைவனுக்கு என்புன் தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே





கொம்மை வரிமுலைக் கொம்பு அனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்குஒழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

10



ஸ்ரீ மாணிக்கவாசகர்